REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: பங்குனி 15உ திங்கள் (28—3—55) ★ ★ வெளியூர்: பங்குனி 16உ செவ்வாய் (29—3—55) [இதழ் 24

அகதிகளுக்கு வீட்டு வசதி!

ரூ. 72 லட்சம் மத்திய அரசாங்க உதவி

புதுடில்லி, மார்ச் 25—

1954—55-ம் ஆண்டில் கடைசி கால் ஆண்டிற்கு, மேற்கு வங்கத்தில் உள்ள அகதிகளில் சுமார் 14,000 பேருக்கு குடியிருப்பு வசதி செய்து தருவதற்காக சுமார் 72 லட்சம் ரூபாயை, மத்திய அரசாங்கம் மேற்கு வங்க அரசாங்கத்திடம் தந்துள்ளது.

மலபார் மாவட்ட ஆட்சிமன்றத்தின் 'புரட்சி'

மே முதல் நாள் விடுமுறை!

தீர்மானம் நிறைவேறுகிறது

கோழிக்கோடு, மார்ச் 26—

மலபார் மாவட்ட ஆட்சிமன்றத்தில், வரும் மே மாதம் முதல் நாளன்று, மாவட்டக் கழக நிர்வாகத்தின்கீழ் உள்ள எல்லா பள்ளிகள், மருத்துவ மனைகள் போன்ற நிறுவனங்களுக்கும் விடுமுறை தருவது என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மாவட்டக் கழகத் தலைவர் பி. டி. பாஸ்கர மேனன் தலைமை தாங்கினர்.

ஜனநாயக முன்னணிக் கட்சியினர் தீர்மானத்திற்கு ஆதரவாகவும், காங்கிரஸ், முஸ்லிம் லீக் கட்சியினர் தீர்மானத்திற்கு எதிராகவும் வாக்களித்திருக்கின்றனர்.

தலைவர், தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்து ஒரு வாக்குப் பெரும்பான்மையில் தீர்மானம் நிறைவேறச் செய்துள்ளார்.

தீர்மானத்தின் மீது மிகக் கடுமையான விவாதம் நடைபெற்றது என்று தெரியவருகிறது.

மே முதல் நாளை, உலகெங்குமுள்ள கோடிக்கணக்கான தொழிலாளர்கள், விழா நாளாகக் கருதுவதாலும், மலபார் மாவட்டத்தில் உள்ள லட்சோபலட்சம் தொழிலாளர்களின் அபிலாஷைகளுக்கும் மதிப்புத் தரும்வகையில் விடுமுறை தரப்படுவதாகத் தீர்மானம் கூறுகிறது.

[குறிப்பு: சென்ற சட்டசபைக் கூட்டத்தில், 'மே முதல் நாளன்று பொது விடுமுறை தேவை,' என எதிர்க் கட்சியினரால் கொண்டுவரப்பட்ட தீர்மானம் சர்க்காரால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. 'மே தினத்தன்று விடுமுறை தருவது, தொழிலாளர்களை வர்க்கப் போராட்டத்தில் ஈடுபட ஊக்குவிப்பதாகும்,' என்று மந்திரி சுப்பிரமணியம் கூறி, தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தது நினைவிலிருக்கலாம்.]

சென்னை மாநிலத்தில் 26 பிரசவ விடுதிகள்

அமைக்க இந்திய அரசாங்க உதவியாம்!

சென்னை, மார்ச் 28—

இந்தியப் பேரரசின் உதவித் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தபட்சம் இரு பிரசவ விடுதிகளையாவது நிறுவ சென்னை அரசாங்கம் முயற்சித்து வருகிறதாம்.

சென்னை மாநிலத்தில் 26 பிரசவ விடுதிகளைத் திறக்க மத்திய அரசாங்கம் உதவி அளிக்குமாம்.

சென்ற ஆண்டில் 430 பிரசவ—குழந்தைகள் பராமரிப்பு நிலையங்களையும், 54 மக்கட்பேறு நிலையங்களையும் சென்னை அரசாங்கம் திறந்துள்ளது என்றும், இவ்வாண்டில், மேலும் திறக்கப்படுமென்றும் கூறப்படுகிறது.

இத் தகவலை ஸ்ரீபெரும்புதூர் வட்டம் பாண்டூர் கிராமத்தில், ஒரு பிரசவ விடுதியைத் திறந்து வைக்கும்போது சுகாதார மந்திரி ஏ. பி. ஷெட்டி கூறியிருக்கிறார்.

தொழில் தேசிய மயமாவதற்கு தொழிலாளரே எதிர்ப்பா?

மேற்கு வங்கத்தில் 2,500 பஸ் தொழிலாளர் வேலைநிறுத்தம்

கல்கத்தா, மார்ச் 27—

மாநில அரசாங்கத்தின் பஸ் போக்குவரத்தை தேசிய மயமாக்குவது என்ற கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், தனிப்பட்டோர் நடத்தும் சுமார் 550 பஸ்களில் வேலை செய்யும் சுமார் 2,500 கண்டக்டர்கள், டிரைவர்கள் முதலானோர், இன்று நடுப்பகலிலிருந்து வேலை நிறுத்தம் செய்துள்ளனர் என்று தெரிகிறது.

இம்முடிவை, நேற்று மாலை அவர்கள் ஒரு கூட்டத்தின்போது மேற்கொண்டனர்.

தாங்கள், புது டில்லிக்கு பிரதமர் நேருவைச் சந்திக்க அனுப்பியுள்ள தூதுக் குழுவின் முடிவு தெரியும் வரையில் வேலை நிறுத்தத்தை நீடிப்பராம்.

ஏப்ரல் 1-ந் தேதி முதல், 120 - தனிப்பட்ட முதலாளிகளின் பஸ்களுக்கு அனுமதி வழங்கவேண்டாமென, முன்னர், சர்க்கார் உத்திரவிட்டிருந்தனராம்.

எகிப்து பிரதமர் டில்லி வருகை

கெய்ரோ, மார்ச் 27—

இந்தோனேஷியாவில் வரும் ஏப்ரலில் நடைபெறவிருக்கும் ஆசிய—ஆப்பிரிக்க மாநாட்டில் கலந்துகொள்ளச் செல்லும் வழியில் எகிப்து பிரதமர் நாசர் பாகிஸ்தானில் இருநாட்களும் இந்தியாவில் இரு நாட்களும் தங்குவார் எனத்தெரிகிறது.

அந்த மாநாட்டுக்கு எகிப்தியப் பிரதிநிதிக் குழுத் தலைவராகச் செல்லும் அவருடன் வெளிநாட்டிலாகா மந்திரி பௌஜி மற்றும் தேசிய மந்திரி சாலே சலீம் ஆகியோரும் இருப்பர் என்று தெரிய வருகிறது.

புதுடில்லியிலிருந்து பிரதமர் நேருவும், நாசரும் சேர்ந்து பாண்டுங் செல்வராம்.

ம. சோ. கட்சியில் கோஷ்டி சண்டை

முன்னாள் பொதுச்செயலாளர் கட்சியிலிருந்து நீக்கப்படுகிறார்

பம்பாய், மார்ச் 26—

காளொரு கொள்கையும் பொழுதொரு விளக்கமும் பகன்றுவரும் மக்கள் சோஷலிஸ்டு கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளரான மது லிமாயி என்பவர், கட்சியிலிருந்து ஓராண்டு காலத்திற்கு நீக்கிவைக்கப்பட்டுள்ளாராம்.

ஏற்கனவே கட்சிக்குள் வளர்ந்தோங்கி நிற்கும் கருத்து வேறுபாடுகளையும், பூசல்களையும் உரப்படுத்தவே இந்த நடவடிக்கை உதவுமெனக் கருதப்படுகிறது.

'மது லிமாயியை கட்சியிலிருந்து ஒரு ஆண்டு நீக்கிவைப்பது' என்ற கட்சியின் பம்பாய் கிளை தீர்மானத்திற்கு 11 வாக்குகளும், அதை எதிர்த்து 4 வாக்குகளும் கிடைத்து நிறைவேறியுள்ளதாம்.

இதனை பம்பாய் கிளை செயலாளர் எம். ஹாரிஸ் அதிகாரபூர்வமாகக் கூறியிருக்கிறார்.

மது லிமாயிமீது, மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு, கட்சியின் நிர்வாகக் குழுவிற்கு சிபாரிசும் செய்யப்பட்டுள்ளதாம்.

மது லிமாயி, ம. சோ. கட்சியில் உள்ள அசோக் மேத்தா, ஹாரிஸ் ஆகியோர் காங்கிரசை ஆதரிக்கும் கொள்கையுடையவர்களாயிருக்கிறார்கள் என்றும், அவர்களது 'எல்லா களங்களிலும்' காங்கிரசுடன் ஒத்துழைப்பது என்ற கொள்கையை தாம் ஏற்றுக்கொள்வதற்கில்லை என்றும் சென்ற வாரம் பத்திரிகை நிருபர்களைக் கூட்டிவைத்துப் புகார் கூறியதாகவும் மது லிமாயிருந்து குற்றம் சுமத்தப்பட்டது.

ஹாரிஸ் மீது, அவர் குழு பாரபட்சத்துடன் நடந்துகொள்வதாயும் கட்சி வசதிகளுக்கு முரணான வகையில் நடந்து கொள்வதாயும் புகார் கூறியிருந்தாராம்.

அதன் எதிரொலியாகவே இப்போது இந்த நடவடிக்கை மது லிமாயி மீது மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிகிறது.

பஞ்சாப் மந்திரி சபைக்கு தலைவலி!

மந்திரி ஜகத்நாராயண் 'டிஸ்மிஸ்'!

லஞ்சக் குற்றச்சாட்டிற்கானவர்!

சாந்திகார், மார்ச் 27—

பஞ்சாப் மாநில கல்வி, சுகாதார, போக்குவரத்து இலாகா மந்திரியான ஜெகத்நாராயண்மீது, நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள புகார்களை ஒட்டி, அவர் பதவியிலிருந்து 'டிஸ்மிஸ்' செய்யப்படக்கூடும் என்று தெரிகிறது.

[இதற்கு முன் நடைபெற்றுள்ள விவரம் 2-ம் பக்கத்தில்]

மந்திரி சபையில் ஒரு பெரும் நெருக்கடி உருவாகிக் கொண்டிருப்பதாயும், அநேகமாக அந்த நெருக்கடி, மந்திரி சபையையே ராஜினாமாச் செய்ய வைப்பதில் கொண்டுபோய் நிறுத்தக்கூடுமெனவும், அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

முதன் மந்திரி, ஜெகத் நாராயணை பதவியிலிருந்து 'டிஸ்மிஸ்' செய்வதைத் தவிர வேறு வழி இல்லை என்றும் தெரிய வருகிறது.

தலைமை உயர்நீதி மன்ற வழக்கறிஞர் ஒருவர், சாந்திகார் முதல் வகுப்பு நீதிபதியிடம் தந்துள்ள அறிக்கையில், மந்திரி ஜெகத் நாராயண்மீது பெரிய இலஞ்சக் குற்றங்களைச் சுமத்தியுள்ளார் என்றும் தெரிய வந்துள்ளது.

அழியப்போவது நாகரீகமல்லவாம்!

முதலாளித்வம் மட்டுமேயாம்

ரஷ்ய ஜனதிபதி பேச்சு

மாஸ்கோ, மார்ச் 26—

"மீண்டும் யுத்தம் வந்தால் உலகில் அழிந்துவிடப்போவது முதலாளித்துவம்தானே ஒழிய, மேற்கத்திய நாட்டினர் கூறுவது போல் நாகரீகம் அல்ல,"

என்று ரஷ்ய பாராளுமன்றத்தின் தற்போதைய கூட்டத் தொடரின் இறுதிக் கூட்டத்தில் பேசுகையில் ரஷ்ய ஜனதிபதி விரோஷிலோவ் கூறியிருக்கிறார்.

"நாகரீகம் அழிந்துவிடுமென்று கூறிக்கொண்டே இனியும் ரஷ்யாவை மேற்கத்திய நாடுகள் பயமுறுத்த முடியாது," என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

மூன்றுவல்லரசு மாநாடு கலந்துகொள்ள தயார்

புல்கானின் அறிவிப்பு

அகில உலகிலும் தற்போது நிலவி வரும் பரபரப்பைத் தணிப்பதை நோக்கமாகக் கொண்டு, மூன்று வல்லரசுகளின் பேச்சு வார்த்தைகள் நடத்த முன்போலவே இப்போதும் தாம் தயாராக இருப்பதாக சோவியத் ரஷ்யப் பிரதமர் புல்கானின் கூறியிருக்கிறார். இது சம்மந்தமான அமெரிக்க ஜனதிபதியின் ஆலோசனையினை தாம் வரவேற்பதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

இடி விழுந்து ஏழு பேர் பலி!

கௌஹாத்தி, மார்ச் 27—

தர்ராங் எனும் மாவட்டத்தில் உள்ள தேசியாஜுலி எனுமிடத்திலிருக்கும் தேயிலைத் தோட்டத்தில் உள்ள ஒரு வீட்டின் மீது இடி விழுந்ததில் ஏழு பேர் பலியாயினர் என்றும், இன்னும் இருவர் நிலை அபாயகரமாயிருக்கிறது என்றும் தெரியவந்துள்ளது.

திரு—கொச்சி காங்கிரஸ் புதுத் தலைவர்

திரு-கொச்சி பிரதேச காங்கிரஸ் தலைவரான கே. பி. மாதவன் நாயர் அகில-இந்திய காங்கிரஸ் பொதுச் செயலாளராக நியமனம் பெற்றுவிட்டதால் தி கொ. காங்கிரஸ் தலைவராக ஏ. பி உதயபானு என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

தலைவர் பதவிக்கு நடைபெற்ற போட்டியில் அவருக்கு 54 வாக்குகளும், அவரை எதிர்த்தவருக்கு 29 வாக்குகளும் கிடைத்தன.

வெண்ணெயைக் கொடுத்துவிட்டு நெய்க்கு அலைய வேண்டுமாம்!

தெற்கு திண்டாடும்போது வளமாகும் வடக்கு உதவுமாம்!

டி. டி. கே.-யின் 'அடிமை மோகம்!'

"ஒரு பக்ரா நங்கல், அல்லது தாமோதர் நதித் திட்டம் வடநாட்டில் இருக்கலாம்; தென்னாட்டில் பெரிய திட்டங்களெதுவும் இல்லாமலுமிருக்கலாம்; ஆனால் தென்னாடு புறக்கணிக்கப்பட்டுவிட்டதாக புகார் கூறமுடியாது. நாம், நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை ஒரே மொத்தமாகக் கவனிக்கவேண்டும்.

"தென்னாட்டில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படுகிறதென்றால், அதிக உற்பத்தி சக்தியும், அதிக நீர்ப்பாசன வசதிகளும் உள்ள வட நாடு தென்னாட்டின் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்யும்; தொழில் உற்பத்தியாகட்டும்—அல்லது வேலை வாய்ப்பாகட்டும்—அவை ஒவ்வொரு துறையிலும் அதுபோலத்தான் நடந்துகொள்ளும்; பரஸ்பரமாக ஒருவரையொருவர் நம்பியிருக்க முடியும்."

—இவ்வாறு மத்திய சர்க்கார் தொழில், வர்த்தக அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் கூறியிருக்கிறார்.

மேலும் அவர், "நான் மத்திய சர்க்காரில், தொழில், வர்த்தக அமைச்சனாக இருக்கும்வரையில், எந்த ஒரு பகுதியையும் சர்க்கார் அசட்டை செய்ய விடமாட்டேன் என்று உத்திரவாதம் அளிக்கத் என்னால் முடியும்," என்று 'அழுத்தமாக'க் கூறினாராம்!

ஆந்திராவில் புது மந்திரி சபை

இன்று பதவியேற்றது

கர்னூல், மார்ச் 28—

திரு. பி. கோபால் ரெட்டியை முதன் மந்திரியாகக் கொண்ட மந்திரி சபை இன்றுகாலை 11 மணியளவில் பதவியேற்றது. கவர்னர் சி. எம். திரிவேதி பதவிப் பிரமாணம் செய்வித்தார்.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 28—3—'55 திங்கள்

எப்போது செய்வார்கள்?

மக்களின் வாழ்க்கைத்தரம் உயர வேண்டும் என்பது அவசியமானது — அவசரமானதுங்கூட! அந்த வாழ்க்கைத் தரத்தை எப்படி உயர்த்திக் கொள்வது என்பதைத் தாமாகவே தெரிந்து, சிந்தித்து, ஆராய்ந்து, அந்த வழி சென்று வாழ்க்கையைச் செப்பனிட்டுக் கொள்ளுகிற அறிவுத் திறனும் மக்களுக்குத் தேவை.

'மணற் கேணியைத் தோண்டத் தோண்டத்தான் நீர் ஊறும்,' என்பதுபோல, அறிவும், கல்வியைக் கற்கக் கற்கத்தான் ஊறும்.

மக்களின் வாழ்க்கைத்தரம் உயர வேண்டும் என்பது எவ்வளவு அவசியமோ, அவ்வளவுக்கு, அந்த வாழ்க்கைத் தரத்தை எப்படி உயர்த்திக் கொள்வது என்ற சிந்தனையைத் தூண்டிச் செயலாற்றச் செய்கிற அறிவை வளர்க்கும் கல்வித்தரமும் உயர்ந்தாக வேண்டும்.

இன்று, இந்த நாட்டு மக்களின் கல்வித்தரம் எவ்வளவு என்பதை நாம் எத்தனையோ முறை எடுத்துக்காட்டியிருக்கிறோம்.

நாட்டு மக்கள் எல்லோரும் குறைந்தபட்சம் அடிப்படைக் கல்வி அறிவு பெற்றவர்களாகவாவது இருக்க வேண்டும்; அப்போதுதான், அப்படி ஓரளவு கல்வியறிவு பெற்ற மக்கள், தங்களுக்கென ஒரு அரசாங்கத்தைத் தாங்களே தேர்ந்தெடுத்து, தாங்களே அந்த அரசாங்கத்தை நடத்துவதின் மூலம்தான் மக்களாட்சி என்ற சொல்லுக்குக் கூறப்படும் பொருள், முழுமை பெற முடியும் என்பதையும் நாம் பலமுறை விளக்கிக் கூறியுள்ளோம்.

'மக்களாட்சி'—இங்கு அந்த நிலையை அடையச் செய்ய வேண்டியது, இன்று ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்திருப்போரின் நீங்காக் கடமையாகும் என்பது, நாம் சொல்லித் தீர வேண்டிய ஒன்றல்ல!

ஆரம்பக் கல்விக்கென சென்னை மாநில அரசாங்கம் வருமானத்தில் ஒரு பெருந்தொகையைச் செலவிட்டு வருவது உண்மைதான்.

ஆனால், ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் சேரும் மாணவர்களில் 40 சதவிகிதத்தினர் மட்டுமே ஐந்தாம் வகுப்பு முடிய கல்வி பெறுகிறார்கள் என்றும், ஏனைய 60 சதவிகிதத்தினர் இரண்டு அல்லது மூன்றாம் வகுப்புடனேயே கல்வி பெறுவதை நிறுத்திவிடுகின்றனர் என்றும், காலப்போக்கில், சிறிதளவு பெற்ற எழுத்தறிவையும் வளர்த்துக்கொள்ள வசதியும், வாய்ப்புமில்லாததினால் அவர்கள் அதை இழந்து விடுகிறார்கள் என்றும், அதனால், ஆரம்பக் கல்வி பெறுவதற்கென அவர்களுக்காகச் சர்க்கார் செலவிட்ட தொகை வீணாகிவிடுகிறதென்றும் இப்போது நடைபெறுகிற சட்டசபைக் கூட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது.

பாதியிலேயே படிப்பை நிறுத்தி விடுபவர்கள் அத்தனை பேரும், தாங்கள் கற்ற சிறிதளவு கல்வியையும் காலப்போக்கில் அறவே மறந்துவிடுகின்றனர் எனக் கொள்ள முடியாது. தாங்கள் பெற்ற ஓரளவு கல்வியை சிறுகச் சிறுக வளர்த்துக் கொள்ள எண்ணுவோரே மிகப் பலராகும்.

இதை மனதில் கொண்டால், அரைகுறையாக ஆரம்பக் கல்வியை நிறுத்தி விடுபவர்களுக்குச் செலவிடப்படும் தொகை முழுதும் வீணாகிவிட்டது எனக் கூற முடியாது.

பொதுவாகவே இன்று, நாட்டு மக்கள், கல்வி கற்றுக் கொள்ளத் தேவையில்லை என்பதால் அல்ல—பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்கே அனுப்பாதிருப்பதோ அல்லது பாதியிலேயே படிப்பை நிறுத்தி விடுவதோ!

மாறாக இன்று, மக்கள் எல்லோரும், 'தங்களுக்குக் கல்வி தேவை; அதற்கான வசதிகள் உடனடியாகச் செய்யப்பட வேண்டும்,' என்று கோருபவர்களாக—ஆர்வம் கொண்டவர்களாக இருக்கிறார்கள்.

மேலும், ஐந்தாம் வகுப்பு வரை தரப்படும் ஆரம்பக் கல்வி மட்டும் இலவசமாகக் கிடைத்தால் போதாது; குறைந்த பட்சம் நடுத்தரக் கல்வி பெறக் கூடிய எட்டாம் வகுப்பு வரையாயினும் கட்டாய இலவசக் கல்வி தரப்பட வேண்டும் என்றும் கருதுகிறார்களென்றால், அது மிகையாகாது.

'நூறு ரூபாய்க்கும் குறைந்த வருமானமுடையவர்களின் குழந்தைகட்கு எட்டாம் வகுப்புவரை இலவசக் கல்வி தருகிறோம்,' என்ற சென்னை சர்க்காரின் அறிவிப்பு, மக்களது கல்வி ஆர்வத்தின் எதிரொலிதானே!

மேலும், நாட்டில் உள்ள நல்லவர்களெல்லாம், 'கட்டாய ஆரம்பக் கல்வி மக்களுக்குத் தரப்பட வேண்டும்,' என்று ஒருமுகமாகக் கருதுகின்றனர்.

என்றாலும், பள்ளி சென்று பாலபாடம் படித்து முடிக்கு முன்பே, பாதியில் படிப்பை நிறுத்திவிடுபவர்கள் நூற்றுக்கு அறுபது பேர் என்றால், இதற்குக் காரணம் என்ன?

பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பி, கல்வி அறிவு பெறச் செய்வதற்கான வாழ்க்கை வசதி நாட்டு மக்களில் பெரும்பான்மையினருக்கு இல்லை என்பதுதானே!

எனவே, நாட்டு மக்களின் கல்வித்தரத்தை உயர்த்த முயற்சிக்கிற அரசாங்கம், கல்வி பெற முன்வருகிற பிள்ளைகள், தொடர்ந்து நடுத்தரக் கல்வி பெறுகிற வரையிலேனும் அந்த பிள்ளைகளுக்கு, பள்ளிக்கு வருவதற்குத் தேவையான உணவு, உடை, புத்தகங்கள் முதலிய கல்விச் சாதனங்களை எல்லாம் தந்து உதவி, ஊக்குவிக்கவும் முயன்றாக வேண்டும்.

பள்ளிக்கூடங்களைத் திறந்து விடுவது மட்டுமே கல்வி வளர்ச்சிக்கு அரசாங்கம் ஆக்கம் செய்துவிட்டதாக ஆகாது.

தமது நிழல், வறுமையின் சாயலாக இருக்கும்வரை மக்கள், தங்கள் பிள்ளைகளுக்குக் கல்வி பெறத் தேவையான சாதனங்கள் அத்தனையையும் தந்து, அவர்களைக் கல்வி பெறுமாறு செய்ய முடியாது.

எட்டாம் வகுப்புவரை கல்வி பெறுகிற பிள்ளைகளுக்கு இலவசமான பகல் உணவும், எளியதானாலும் முறையான உடையும், எழுதுவதற்கு பலகையும், படிக்க புத்தகமும் அரசாங்கம் தந்தாக வேண்டும். அப்போதுதான், பிள்ளைகள் பாதியிலேயே படிப்பை நிறுத்தமாட்டார்கள்; அதன்மூலம், அரசாங்கம் கூறுகிறபடி—அரசாங்கப் பொருளுக்கு நஷ்டம் உண்டு பண்ணவும் மாட்டார்கள்.

எனவே, வறுமை அகன்று, மக்கள் வாழ்வில் வளமை குடிபுகும் வரையிலேனும், அரசாங்கம், இந்தச் சலுகைகளைச் செய்தாக வேண்டும் என்று எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

ஓடும் வண்டியில் தொலை பேசி!

பம்பாய், மார்ச் 25—

ஓடிக்கொண்டிருக்கும் வண்டிகளில் டெலிபோன் வசதி—சென்னை, பம்பாய், கல்கத்தா, டெல்லி போன்ற பெரிய நகரங்களில் விரைவிலேயே தபால்—தந்தி இலாகா திட்டமொன்றின் படி அமுலுக்கு வருமென்று தெரியவருகிறது.

ஏற்கனவே கடந்த மூன்றாண்டுகளாக ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும், சர்க்கார் வரவு—செலவுத் திட்டத்தில், அதற்கான செலவுத் தொகை கூட ஒதுக்கப் பட்டுவிட்டதாயும் கூறப்படுகிறது

இந்தியாவில் அணுகுண்டு

பண்டித நேரு கருத்து

"இந்தியாவிடம் அணு ஆயுதங்கள் கிடையாது; அணு ஆயுதம் வைத்துக்கொள்ள வேண்டுமென்ற ஆசையும் கிடையாது—அப்படி வைத்துக் கொள்வதென்பது சாத்தியமானதுமாகாது."

"இந்தியா, தனது தற்காப்புக்காக மட்டுமே ஆயுதம் வைத்துக் கொள்ளும்; ஆயிரக் கணக்கான மைல்களுக்கப்பாலுள்ள இடங்களில் உபயோகப்படக்கூடிய ஆயுதங்கள் இந்தியாவிற்குத் தேவையில்லை; மற்றவர்களால் தயாரிக்கப்படும் முதல்தர ஆயுதங்களை விட நமது நாட்டில் தயாரிக்கப்படும் சொந்த ஆயுதங்களையே கொடுக்க விரும்புவேன்; அந்த ஆயுதங்கள் இரண்டாந்தரமானவையாக இருந்தாலும் கூட பரவாயில்லை."

இவ்வாறு, டெல்லி மக்கள் சபையில் தற்காப்பு இலாகா மானியக் கோரிக்கைமீது நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்ட இந்தியப் பிரதமர் நேரு பண்டிதர் கூறினார்.

மேலும் அவர், இனிமேல், முப்படைகளின் சேனாதிபதிகளின் பெயர்கள் மாற்றப்படும் என்றும், அவர்களெல்லாம் இனி 'இராணுவக் காரியாலய தலைவர்கள்,' 'விமானப் படை காரியாலயத் தலைவர்கள்,' 'கடற்படை காரியாலயத் தலைவர்கள்' என்றே அழைக்கப்படுவரெனவும், இந்தவிதமான பெயர் மாற்றங்களால் அவர்களது அதிகாரங்களோ அந்தஸ்தோ எதுவும் குறைந்துவிடப் போவதில்லை எனவும் கூறினார். 'சேனாதிபதி' என்ற பெயர் ஜனநாயக சம்பிரதாயத்திற்கும் அரசியல் அமைப்புக்கும் பொருத்தமானதாக இல்லை என்றும் அவர் கூறினார்.

இராணுவச் சொற்கள் இந்தி மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு உபயோகிக்கப்படுமெனவும், சென்ற குடியரசு தினத்தன்றே அது ஆரம்பமாகி விட்டதென்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

விலைவாசி வீழ்ச்சியைக் கண்டறிய விசாரணைக் குழு நியமனம்!

குடியானவர்களுக்குக் குறைந்த விலையில் விவசாயக் கருவிகள் கிடைக்குமாம்

"அயல்நாடுகளின் தேவைகளை ஆராய்ந்தறிய பல்வேறு நாடுகளுக்கு வர்த்தகத் தூதுக் குழுக்களை அனுப்புவதென இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளது,"

என்று, மத்திய சர்க்கார் உணவு மந்திரி ஏ. பி. ஜெயின், டில்லி மக்கள் சபையில் உணவு, விவசாய இலாகா மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கையில், உணவுப் பண்டங்களின் விலை வீழ்ச்சியைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படவிருக்கும் நடவடிக்கைகள் பற்றிக் குறிப்பிடுகையில் கூறினார்.

பல்வேறு மார்க்கெட்டுகளில் உணவுத் தானியங்கள், மற்றும் இதர விவசாயவிளை பொருட்கள் ஆகியவற்றின் விலைவாசிகளெல்லாம் பெருத்த அளவிற்கு வீழ்ச்சியுற்றிருப்பதால், அவ்வீழ்ச்சியைத் தடுக்க தகுந்த முறைகளைக் கண்டறியும் பொருட்டு ஒரு விசாரணைக் குழுவை நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

மேலும், குடியானவர்களுக்குக் குறைந்த விலையில் விவசாயத்திற்குத் தேவையான கருவிகள் கிடைப்பதற்கான ஏற்பாடுகள் செய்வதுபற்றி சர்க்கார் யோசித்து வருவதாகவும், இனிமேல் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சிலவித விவசாயப் பொருட்களின் விற்பனையில் கிடைக்கும் பணம் இந்தியாவின் அபிவிருத்தித் திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்படுமெனவும் கூறியிருக்கிறார்.

மேலும், உணவு சம்மந்தப்பட்ட வரையில் இந்தியா, முற்றிலும் திருப்திகரமான ஒரு நிலையில் இருப்பதாகவும், உணவுப் பண்டங்களின் விலைகளில் ஏற்பட்டுள்ள தாறுமாறான ஏற்றத் தாழ்வுகள் நிரந்தர அம்சமாக இருக்காது என்று நம்பலாம் என்றும் கூறினார்.

உணவுப் பண்டங்களின் விலை வீழ்ச்சியைத் தடுக்க மத்திய சர்க்கார் மேற்கொண்டுள்ள நடவடிக்கையாக, சில குறிப்பிட்ட மார்க்கெட்டுகளில் விவசாயிகளிடமிருந்து குறைந்த பட்ச விலையில் நேரடியாகவே தானியங்களை வாங்கிக்கொள்ள ஆரம்பித்திருப்பது—தேவையான போக்குவரத்து வசதிகள் இல்லாத இடங்களில் அவற்றை ஏற்படுத்த உத்தேசித்திருப்பது—கிராமக் கடன் பரிசீலனைக் குழுவின் முக்கிய சிபாரிசுகளை அமுல் செய்ய உத்தேசித்திருப்பது — உணவுத் தானியங்களின் ஏற்றுமதியை அதிகரிக்கச் செய்வது போன்றவைகளைக் குறிப்பிட்டிருக்கிறார்.

ஜனநாயக நடைமுறையைக் காப்பாற்ற.....!

இலஞ்சக் குற்றம் சாட்டப்பட்டுள்ள மந்திரி மூன்று இலாகா பொறுப்புகளையும் கைவிடுவார்?

இலஞ்சக் குற்றம் சாட்டப்பட்டுள்ள பஞ்சாப் மந்திரி ஜெகத் நாராயண், தம்மிடம் எஞ்சியுள்ள மற்ற இரு இலாகா பொறுப்புகளையும் கைவிட்டுவிட விரும்புவதாக முதன் மந்திரியிடம் தெரிவித்ததில், 'இப்போது அதற்கு அவசியமில்லை,' என முதன் மந்திரி கூறியதாகவும் தெரியவருகிறது.

சபையில், 'ஒரு திட்டமான, தீர்மானமின்றி, இதுபற்றிய விவாதம் கூடாது' என்று முதன்மந்திரி கூறியதை சபைத் தலைவர் ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

எதிர்க் கட்சியினர் பின்பு பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை ஒன்றில், ஜெகத் நாராயண் மீதுள்ள லஞ்சக் குற்றம், கல்வி இலாகா சம்மந்தப்பட்டது மட்டுமல்ல; மாறாக, அவர் பொறுப்பிலுள்ள போக்குவரத்து, சுகாதாரம் ஆகிய இலாகாக்களையும் பொறுத்ததாகும்; எனவே அவர், எல்லா பொறுப்புகளையும் விட்டுத்தானாக வேண்டும்; அப்போதுதான் அவர் மீதுள்ள குற்றச் சாட்டுகளை பாரபட்சமின்றி, நேர்மையானதொரு விசாரணை நடைபெற முடியும்," எனக் குறிப்பிட்டுள்ளனர்.

அவர் மீது எதிர்க்கட்சியினர் சுமத்தியுள்ள லஞ்சக் குற்றங்களை அவர்கள் நிரூபிப்பதற்காக தமது பொறுப்பிலிருந்த மூன்று இலாகாக்களில், கல்வி இலாகா பொறுப்பிலிருந்து தாமாகவே முன்வந்து, விலகிக்கொண்டிருக்கிறார் என்ற செய்தி ஏற்கனவே வெளிவந்தது.

ஆனால், இப்போது அவர் எல்லா இலாகா பொறுப்புக்களிலிருந்தும் விலகிக்கொண்டால்தான், நியாயமான, பாரபட்சமற்ற விசாரணை நடைபெற முடியும் என்று எதிர்க்கட்சியினர் கோருகின்றனராம்.

கோபால் சிங் கால்சா என்ற அகாலி கட்சித் தலைவர், எதிர்க்கட்சியின் சார்பில், சட்ட சபையில், 'முதன் மந்திரி அவர்கள், ஜெகத் நாராயண் அவர்களை ஒரு இலாகா பொறுப்பிலிருந்து மட்டும் விலகிக்கொள்ளச் செய்திருக்கிறார்; எங்கள் கோரிக்கை, அவர் வகிக்கும் எல்லா இலாகா பொறுப்புகளிலிருந்தும் அவர் விடுவிக்கப்பட வேண்டும் என்பதாகும்" என்று கூறியிருக்கிறார்.

ஆசியாவில் நெல் உற்பத்தி

சீனாவைத் தவிர ஆசியாவிலுள்ள நாடுகளில் 1953—54-ல், 17,80,00,000 ஏக்ரா விஸ்தீரணத்தில் நெல் சாகுபடி செய்யப்பட்டதாக காமன்வெல்த் பொருளாதாரக் கமிட்டியின் நெல் தகவல் பற்றியஅறிக்கை கூறுகிறது.

சாகுபடி விஸ்தீரணம் நாடுகள் வாரியாகப் பின்வருமாறு:—

இந்தியா: 7,66,46,000 ஏகரா.
பாகிஸ்தான்: 2,45,33,000 ஏகரா.
இலங்கை: 9,12,000 ஏகரா.
பர்மா: 98,95,000 ஏகரா.
தாய்லாந்து: 1,45,36,000 ஏகரா.
இந்தோ—சீனா: 96,00,000 ஏகாரா.
ஜப்பான்: 74,00,000 ஏகரா.
பிலிப்பைன்ஸ்: 66,00,000 ஏகரா.

1954—55-ல், இந்தியா சாகுபடி விஸ்தீரணம்: 6,26,30,000 ஏகரா.

1953—54-ல், ரஷ்யா நீங்கலாக—உலக உற்பத்தி 16,65,00,000 டன்களாகும்; இதில், இந்திய கண்டுமுதல் 3,98,22,000 டன்கள்; இலங்கையில் 5,34,000 டன்கள் விளைந்தது.

ஆசிய நாடுகளில் ஜப்பானில் தான கண்டு முதல் அதிகம். அங்கு ஏகராவுக்கு 20 அந்தர் அரிசி கிடைக்கிறது. இந்தியாவில் ஏகராவுக்கு ஏழு அந்தர் அரிசி (ஏறக்குறைய 1,500 ராத்தல் நெல்)தான் கிடைக்கிறது.

இந்தியாவில் விளையும் சில உயர்தர ரக நெல்கள் அரிசியாக்கப்பட்டு ஏடன், கிழக்கு ஆப்பிரிக்கா, இலங்கை, மேற்கு ஜெர்மனி, பார

(4-ம் பக்கம் பார்க்க)

'புத்தர் காலத்தில் பொதுவாயிருந்த கல்வி புரோகிதர் ஆட்சியில் பார்ப்பனரின் தனி உடைமையாக்கப்பட்டது'

'வெள்ளையர் ஆட்சியில் மீண்டும் பொதுமக்கள் சொத்தாயிற்று'

கல்வியில் செய்ய வேண்டிய சீர்திருத்தம் குறித்து டாக்டர் வரதராசுலு, எம். எல். ஏ.

"இன்றைய தினம், மிக விரிவான அளவிலேயும், ஒரு தெளிவான ஒழுங்கு முறையோடும் கூடிய கல்வி இளைஞர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது; ஆனால், பண்டைய இந்தியாவில் இவ்வண்ணம் மக்களுக்கெல்லாம் கல்வியை அளிக்கும் ஒழுங்கு படுத்தப்பட்ட விரிவான முறை இருந்தது கிடையாது.

"இந்திய நாட்டிற்குப் புதிய பாதையை வகுத்த பேரறிஞர் புத்தர் தோன்றியதற்குப் பிறகுதான் அவருடைய மதத்தைப் பரப்பும் பணியில் ஈடுபட்ட புத்த சந்நியாசிகள்தான் முதன் முதலாக இந்தியாவில், பொது மக்களுக்கெல்லாம் கல்வியைத் தருவது என்கிற ஏற்பாட்டைத் தொடங்கி வைத்தார்கள். பள்ளிக்கூடங்கள் பலவற்றை நிறுவி, பொதுமக்களை அங்கே திரட்டி, அனைவருக்குமாகக் கல்வியை அளிக்க அருமையான ஏற்பாடுகளைச் செய்தனர்—புத்த மதத் துறவிகள்! ஆனால் ஒன்று; புத்த மதத் துறவிகளால் அளிக்கப்பட்டுவந்த கல்வி, மதக் கோட்பாடுகளையும், ஒழுக்க முறைகளையும் மட்டுமே வலியுறுத்துவதாக இருந்தது; அவர்களுடைய பள்ளிகளில் பெரும்பாலும் சமயச் சார்புடைய கருத்துக்கள் மட்டுமே இடம் பெறலாயின.

"ஆனால் இப்போதோ, கல்வி—விஞ்ஞானம்—வரலாறு——நிலநூல்—ஆட்சிமுறை—கணக்கு—இலக்கியம் முதலிய பல்வேறு பொருள்களைப் பற்றியும் மாணவர்களுக்கு விளக்கம் அளிக்கிறது.

"இந்தியாவில், இந்து அரசர்களின் ஆதிக்கமும், இந்து மதப் புரோகிதர்களின் செல்வாக்கும் தலைசிறந்து விளங்கிய காலத்தில், கல்வியானது, சில குறிப்பிட்ட மேல் சாதி மக்களுக்கு மட்டுமே சொந்தம் என்கிற நிலை இருந்து வந்தது. ஏனைய சாதிகளைச் சேர்ந்த மக்களுக்கெல்லாம் கல்வியின் இன்பத்தைப் பெறுகிற உரிமையே கிடையாது என்கிற அநீதி நிலை நாட்டப்பட்டு வந்தது—அந்தக் காலத்தில்! நல்ல வேளையாக இப்போது அந்தக் கொடுமை அழிந்துவிட்டது!

"ஆண் - பெண் யாராயிருந்தாலும், எந்த சாதி, அல்லது மதம், அல்லது கோட்பாட்டைச் சார்ந்தவராயிருந்தாலும், நாட்டு மக்கள் அத்தனை பேரும் இப்போது கல்வியைப் பெற இயலும். முன்னாள்போல இப்போது, அது, ஒரு சில மேல் சாதிக்காரர்களின் தனியுடைமையாக இல்லை. மக்கள் அனைவருக்கும் பொதுவுடைமையாகிவிட்டது.

—இவ்வாறு, 27—3—55-ல், *சென்னை மெமோரியல் மண்டபத்தில் நடைபெற்ற சென்னை மாநில ஆரம்பப் பள்ளி மானேஜர், ஆசிரியர் மானேஜர் முதல் மாநாட்டில் தலைமையுரை ஆற்றுகையில், டாக்டர் பி. வரதராசுலு (நாயுடு) அவர்கள் குறிப்பிட்டார்.*

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

"இக் காலக் கல்விமுறை இந்த இரு பிரச்சினைகளிலேயும், முற்கால முறையை விடச் சிறந்ததாகவும், உயர்ந்ததாகவும் ஒளி வீசித் திகழ்கிறது. ஆனால் வேறு சில பிரச்சினைகளைக் கவனிக்கும்போது முற்கால முறை இக்கால முறையை விட உயர்ந்ததாக இருந்தது என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

"பழங்காலத்தில், ஆசிரியர்களுக்கும்—மாணவர்களுக்குமிடையே அளவற்ற அன்பும், நெருங்கிய தொடர்பும் இருந்தன; ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பல்வேறு உறுப்பினர்களைப்போல அவர்கள் நேசத்தோடும் பாசத்தோடும் பழகி வந்தனர். ஆசிரியர், அந்நாளில், மாணவனுடைய கல்விக்கு மட்டுமல்லாமல் அவனுடைய வாழ்க்கைக்கே வழிகாட்டியாக விளங்கிவந்தனர். ஆனால் இப்போதோ?

"ஆசிரியருக்கும் மாணவருக்குமுள்ள தொடர்பு, உணர்ச்சியும் எழுச்சியும் அற்றதாக, வெறும் கடமையும் தொழிலும் என்கிற அளவுக்கு உட்பட்டதாக ஆகிவிட்டது. பழங்காலப் பாசத்தையும் நேசத்தையும் இப்போது நாம் பார்க்க முடியாது.

"முற்காலத்தில் கல்வி, இப்போது இருப்பதைப்போல, மேலதிகாரிகளின் கட்டுபாட்டுக்கும், சட்ட திட்டங்களுக்கும் உட்பட்டதாக இல்லை. தங்களுடைய அனுபவத்திற்கும், தேவைக்கும் ஏற்றபடி, கல்வியின் தரத்தையும், முறையையும் மாற்றி அமைத்துக்கொள்கிற முழு உரிமை ஆசிரியர்கட்கு இருந்தது. இந்த உரிமை இருந்த காரணத்தால், ஆசிரியர்கள், தங்களுடைய முழுத் திறமையையும் பயன்படுத்தி, மாணவர்களை அறிவின் செல்வர்களாக உருவாக்க முடிந்தது. ஆனால், இன்றைய தினம், ஆசிரியர்களுக்கு இத்தகைய உரிமை ஏது? ஒவ்வொரு துறையிலேயும் அவர்களுடைய சுதந்திரங்கள் பறிக்கப்படுகிற கொடுமையை அல்லவா இந்நாளில் நாம் கண்டு கண்டு வேதனைப்பட வேண்டி இருக்கிறது?

"முன்னாளில் மாணவர்களுக்குத் தரப்பட்ட கல்வி, அவர்களுடைய பிற்கால வாழ்வுக்கு மிகவும் பயன்படுவதாக இருந்தது. பள்ளிக்கூடத்தை விட்டு விலகியவுடன் மாணவன், அங்கே தரப்பட்ட பயிற்சியைக் கொண்டு, தன் வாழ்க்கையைத் திறம்பட நடத்த முடிந்தது—அந்நாளில். ஆனால், இந்நாளிலோ, பள்ளிக்கூடத்தில் கையாளப்படுகிற பாட திட்டத்திற்கும் மாணவர்களின் பிற்கால வாழ்க்கைக்கும் தொடர்பே இல்லாமல் இருக்கிறது. இதுமட்டுமல்ல; முற்காலக் கல்வி, இயற்கையோடு இணைந்து நிற்கும் இணையற்ற சிறப்புப் படைத்ததாக இருந்தது; அழகான காட்சியை வழங்கும் ஆற்றங்கரைகளிலேயும், எழிலும் இனிமையும் ததும்பும் தன்மை படைத்த காடுகளிலேயும், மலைகளுக்கு அருகிலேயும் அக்காலக் கல்வி வழங்கப்பட்டு வந்தது; ஆனால், இப்போதோ, உயிரும் உணர்ச்சியுமற்ற நான்கு சுவர்களுக்கு நடுவிலே முடிந்துவிடுகிறது கல்வி.

"முற்காலத்தில் நம் நாட்டில் தரப்பட்டு வந்த கல்வியோடு மட்டுமல்ல—இக்காலத்தில் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் தரப்பட்டு வருகிற கல்விமுறையோடு ஒப்பிட்டுப் பார்த்தாலும் சரி—நம் நாட்டுக் கல்விமுறை, குறைபாடு உடையதாகவே இருக்கிறது.

"நம் நாட்டுக் கல்விமுறை, குறைபாடுகள் அற்றதாக மாற்றி அமைக்கப்பட வேண்டுமானால், முதலில் நாம் செய்யவேண்டிய காரியம், சமுதாயத்தின் தலைசிறந்த அறிவாளிகளே ஆசிரியத் தொழிலில் ஈடுபடுகிறார்கள் என்று சொல்லத்தக்க நிலையை ஏற்படுத்துவதுதான்!

"ஆசிரியத் தொழில் மிகவும் மதிப்புள்ளதாகவும், எல்லோராலும் விரும்பப்படுவதாகவும், அந்தஸ்தும் செல்வாக்கும் நிறைந்ததாகவும் ஆக்கப்பட அவர்களுக்கு சிறந்த ஊதியம் தரப்படவேண்டும்.

"கண்ணியமான ஊதியமும், கணிசமான செல்வாக்கும் படைத்ததாக ஆசிரியத் தொழில் மாற்றப்பட்டால்தான் திறமை மிகுந்தவர்கள் அந்தத் தொழிலுக்கு வருவர்; கல்வியின் தரமும் அப்போதுதான் உயர முடியும்.

"கல்வித்துறையில் அரசாங்கத்தின் தலையீடு அடிக்கடி நேரிடாதபடி பார்த்துக் கொள்வது அவசியமாகும்.

"கல்வித்துறையானது தனிப்பட்ட நிர்வாகங்களின் பொறுப்பில் இருக்க வேண்டுமே தவிர, அரசாங்கத்தின் நேரடி ஆதிக்கத்தில் நிச்சயமாக இருக்கக் கூடாது.

"இது, ஜனநாயக நாடு; ஆளும் கட்சிகள் அடிக்கடி மாறக்கூடிய நிலை இங்கே உண்டு. ஒவ்வோர் கட்சிக்கும் ஒவ்வோர் வகையான கல்விக் கொள்கை இருக்கக்கூடும். இந்த நிலையில், அரசாங்க ஆதிக்கத்தில் கல்வித்துறை இருக்குமானால், அந்தத் துறையில் அடிக்கடி மாறுதல்கள் ஏற்பட்டு குழப்பம்தானே உண்டாகும்?

"மேல் நாடுகளில் இருப்பதைப் போன்ற கல்விச் சபைகளை ஏற்படுத்தி, கல்வித்துறையைப் பற்றிய முழுப் பொறுப்பையும் அவற்றிடம் ஒப்படைக்கலாம். இந்தக் குழுக்களின் பணியையும், முறையையும் வரையறுக்கும் சில விரிவான சட்ட திட்டங்களை மட்டும் அரசாங்கத்தார் வகுத்துவிட்டு, மற்றபடி முழு சுதந்திரத்தையும் அந்தக் குழுக்களுக்கு அளித்துவிடலாம்.

"ஆரம்பக் கல்வியான தொடக்க வகுப்புகளில் சின்னஞ்சிறு குழந்தைகளே பயில்வதால், அந்தவகுப்புகளில், எழுதுவது-படிப்பது— கணக்குப்போடுவது ஆகிய மூன்றை மட்டுமே சற்றுக்கொடுத்தால் போதும்; சிறிய குழந்தைகளின் இளைய மூளைகளின்மீது பலவகையான பாடங்களைத் திணித்து அவர்களை வாட வைப்பது முறையல்ல என்பது என் கருத்து.

"பள்ளிக் கூடங்களில் மதக் கல்வி தேவையில்லை. சமுதாயத்தில் எப்படிப் பழகுவது என்பதை விளக்கிக் காட்டும் ஒழுக்கக் கல்வியை மட்டும் போதித்தால் போதும். குறைந்தது 18 வயதாவது நிரம்பாத மாணவர்களுக்கு மதக்கோட்பாடுகளைப் புகட்டுவது சிறிதும் நியாயமல்ல.

"கட்டாய ஆரம்பக் கல்வி, நாடு முழுவதிலும் நடைமுறைக்குக் கொண்டுவரப்படவேண்டும். 14-வயது வரையுள்ள எல்லாப் பிள்ளைகளுக்கும் கல்வியும், பகல் உணவும் இலவசமாக அளிக்கப்பட வேண்டும். தனிப்பட்டவர்களால் நடத்தப்பட்டாலும் சரி—அரசாங்கத்தால் நடத்தப்பட்டாலும் சரி—ஆரம்பப் பாடசாலைகளுக்கு, அதிகப்படியான பண உதவி செய்யப்பட வேண்டும். இளம் மாணவர்களின் உடல் நலத்தைக் கண்ணும் கருத்துமாகப் போற்றி வளர்ப்பதற்காகக் குழந்தை நல விடுதிகள் ஆங்காங்கே ஏற்படுத்தப்பட வேண்டும். உடல் அல்லது உள்ளத்தின் வளர்ச்சியில் குறைபாடுடைய குழந்தைகளை வளர்க்க குழந்தை மருத்துவ மனைகள் நாடெங்கும் நிறுவப்பட வேண்டும்.

மேல்நாடுகளில் இருப்பதைப் போல, ஒவ்வோர் வட்டாரத்திலும் பெற்றோர்கள் தங்களுடைய கழகங்களை அமைத்து, அந்தக் கழகங்கள் மூலமாகவே பள்ளிக்கூடங்களைத் தொடங்கும்படி ஊக்கமளிக்கவேண்டும்.

சிறிய வகுப்புகளில் பெண்களே அதிக அளவில் ஆசிரியர்களாக நியமிக்கப்பட வேண்டும் சிறு குழந்தைகளுக்குத் தேவையான தாய்மை அன்பும், பொறுமையும், நிதான உணர்ச்சியும் அவர்களிடமே அதிகமாக இருக்கின்றன.

"இவற்றைச் செய்து முடிக்க ஏராளமாகப் பணம் தேவை. தாராள உள்ளம் படைத்த பணக்காரர்களிடமிருந்து ஓரளவு பணத்தை ஈட்டலாம்; குறிப்பிட்ட அளவுக்கு மேல் வருமானமும் சொத்தும் உடையவர்கள்மீது 'கல்வி வரி' என்பதாக ஒரு வரியை விதித்து, அதன் மூலமாகவும் சிறிது பணம் சேர்க்கலாம். மிகப் பெரிய கட்டிடங்களில்தான் பள்ளிக்கூடங்கள் இருக்கவேண்டும் என்கிற தப்பெண்ணத்தை விட்டு விட்டு, ஓலை வேய்ந்த 'ஷெட்டு' களில்கூட அவற்றை நடத்த முன் வரலாம். அப்படிச் செய்வதன் மூலமாகவும் சிறிது பணம் மிச்சப்படும்.

"மத்திய அரசாங்கம், மாகாண அரசாங்கம் – இவற்றின் பொது வருமானத்திலிருந்து இன்னமும் சற்று அதிகப்படியான தொகையைக் கல்விக்காக ஒதுக்கலாம்."

தமிழகமெங்கும் ஐந்தாண்டுத் திட்ட கண்டன நாள்

பேரூர் பொதுக் குழுவின் தீர்மானப்படி, தமிழகமெங்கும் 'ஐந்தாண்டுத் திட்டக் கண்டன நாள்', தி. மு. கழகத் தோழர்களால், பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்தப்பட்டும், செயற் குழு கூடி கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டும் சிறப்புற கொண்டாடப்பட்டுள்ளது. விவரங்கள் சுருக்கிக் கீழே தரப் பட்டுள்ளது :—

சென்னையில்...

13-வது வட்டம்

20—3—55 *காலை 10 மணிக்கு, சென்னை மண்ணடி தி. மு. கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் பல தோழர்கள் ஐந்தாண்டுத் திட்டத்தைக் கண்டித்து சொற்பொழிவாற்றினர்.*

14-வது வட்டம்

20—3—55-*ல், கழகக் கட்டிடத்தில் நடைபெற்ற கழகச் செயற் குழு கூட்டத்தில், கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.*

17-வது வட்டம்

20—3—55 *காலை 9 மணியளவில் நடைபெற்ற செயற் குழு கூட்டத்தில், ஐந்தாண்டுத் திட்டக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.*

19-வது வட்டம்

20—3—55 *மாலை 4 மணிக்கு, தோழர் தமிழன்பன் தலைமையில் நடைபெற்ற செயற் குழு கூட்டத்தில், தோழர்கள் கே. சுப்பிரமணி, தேவன், மற்றும் பலர் பேசிய பின், கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.*

37-வது வட்டம்

20—3—55 *மாலை 5 மணிக்கு, சென்னை இராயப்பேட்டை கழகப் பணி மனையில் தோழர் டி. ஞானசேகரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தோழர்கள் பொ. ஏழுமலை, பொ. நா. சண்முகம், மு. க. மொய்தீன், கோ. இளவரசு, மு. புரட்சிமணி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.*

திருவல்லிக்கேணி

20—3—55 **மாலை 3 மணிக்கு, கே. எஸ். பாண்டியன் படிப்பகத்தில், தோழர் சி. எல். திருநாவுக்கரசு தலைமையில் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் நீல. நாராயணன், எம். கே. மணி, மா. பா. சாரதி, தி. தி. பாலு, சாமிநாதன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.**

★

குன்றத்தூர்

20—3—55 **மாலை 4 மணிக்கு ஐந்தாண்டுத் திட்ட கண்டன ஊர்வலமும், மாலை 6 மணிக்கு தோழர் டி. எம். இராமலிங்கம் தலைமையில் பெரிய தெருவில் பொதுக் கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் டி. நாகப்பன், சி. சண்முகம், டி. டி. தணிகாசலம், டி. எம். கணபதி ஆகியோர் ஐந்தாண்டுத் திட்டத்தினால் வடநாடு வளமிக்க நாடாக மாறுவதும், தென்னகம் வளம் குன்றி வருவதையும் விரிவாக எடுத்துக் கூறினர்.**

சுந்தரபாண்டியம்

21—3—55 **இரவு 7 மணிக்கு, அண்ணா திடலில், தோழர் எஸ். முத்து தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழர்கள் ஆ. திராவிடமணி, ஈரோடு, எஸ். அப்பாவு ஆகியோர் சொற்பொழிவாற்றியதும் தோழர் ஈ. வெ. கி. சம்பத் நீண்டதோர் சிறப்புரையாற்றினார்.**

மல்லசமுத்திரம்

20—3—55-**ல், தோழர் எம். ஆர். ஆறுமுகம் தலைமையில், வெள்ளாஞ்செட்டியார் மண்டபத்தில், நடைபெற்ற செயற் குழுக் கூட்டத்தில் தோழர் மா. தேவராசனால் முன்மொழியப்பட்டு, தோழர் எம். பி. காச்சிமுத்துவால் வழிமொழியப்பட்ட ஐந்தாண்டுத் திட்ட கண்டனத் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.**

முத்துச்சாமிபுரம் (இ. நா. புரம் மாவட்டம்)

20—3—55- **மாலை 6½ மணியளவில் ஊர்வலமும், இரவு 7½ மணியளவில் தோழர் பெ. பெருமாள் தலைமையில் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. தோழர் ஆ. சண்முகவேல் சொற்பொழிவாற்றினார்.**

சத்திரப்பட்டி

20—3—55 **இரவு 9 மணிக்கு, திரு. வி. க. நினைவுப் படிப்பகத்தில் தோழர்ச. உமையாலு தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சு. இராசகோபால், எஸ். எழிலரசு, வளர்மதி, ஏ. இராசேந்திரன், எஸ். முத்துச்சாமி, மற்றும் பல தோழர்களும் சொற்பொழிவாற்றினர்.**

ஆலடிக்குழலை (பட்டுக் கோட்டை வட்டம்)

20—3—55-**ல், தோழர் க. குழந்தைவேலு தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் வை. இராமசாமி, வி. இராமச்சந்திரன், மெ. முத்துசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.**

செங்குன்றபுரம்

20—3—55 **இரவு 7½ மணிக்கு தோழர் மு. குருசாமி தலைமையில் ஊர்வலமும், 8 மணிக்கு தோழர் எஸ். இராமசாமி தலைமையில் பொதுக் கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் எஸ். மாணிக்கவாசகம், க. குருசாமி, பி. முத்தையன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.**

பாகிஸ்தானில் புயல் வலுக்கிறது!

கவர்னர்-ஜெனரல் சர்வாதிகாரம் பெறுகிறார்

நெருக்கடி நிலைமை பிரகடனம்!

முகம்மது அலியின் எதிர்காலம் என்ன?

கராச்சி, மார்ச் 27—

கொந்தளிக்கும் அலைகடலாய் காட்சி தந்த பாகிஸ்தான் அரசியல் நிலை, இன்று, கவர்னர் - ஜெனரல் குலாம் முகம்மது, நாடு முழுவதும் 'நெருக்கடி நிலை' பிரகடனம் செய்வதில் கொண்டுபோய் நின்றுள்ளது.

மேற்கு பாகிஸ்தானில் சிந்து மாநிலத்தில், கடந்த சில வாரங்களாக வீசிவந்த கடும்புயலும், 'நெருக்கடி நிலை' பிரகடனத்திற்குக் காரணமாக அமைந்துள்ளது.

கவர்னர்-ஜெனரல் இன்று பிரகடனம் செய்துள்ள உத்திரவின் கீழ், மேற்கு பாகிஸ்தானில் உள்ள எல்லா மாநிலங்களும் ஒன்றாக இணைக்கப்படவும், 'கிழக்கு வங்கம்' என்று இப்பொழுதுள்ள மாநிலம், இனி, 'கிழக்கு பாகிஸ்தான்' என்று அழைக்கப் படவுமான அதிகாரங்களை கவர்னர்-ஜெனரல் மேற்கொண்டுள்ளார்.

இவையன்னியில், பாகிஸ்தானிற்கு புதியதொரு அரசியல் அமைப்பை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் கவர்னர்-ஜெனரலுக்கு இப்பிரகடனம் மூலம் அதிகாரம் கிடைக்கிறது.

முன்பு 'கவர்னர் - ஜெனரலின் ஒப்புதல் பெருதவை' என்று பெடரல் நீதி மன்றம் கடந்த மார்ச் 31-ந் தேதி குறிப்பிட்ட 35 சட்டங்களையும் கவர்னர்-ஜெனரல் இன்றைய பிரகடனத்தின் மூலம் உயிர்ப்பித்திருக்கிறார், எட்டு இராணுவ அதிகாரிகளுக்கு தண்டனை அளித்த இராவல்பிண்டி சதி வழக்குச் சட்டமும் இந்த 35 சட்டங்களுள் ஒன்றாகும்.

வரும் மே மாதத்திற்குள்ளாக மேற்கு பாகிஸ்தானம் ஒரே அங்கமாக உருப்பெற்றுவிடும் என்றும், மக்கள் சபை ஏற்கனவே கலைக்கப்பட்டுவிட்டதால் 1955—56-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தை அங்கீகரிக்கவும், கவர்னர்-ஜெனரலுக்கு பிரகடனம் அதிகாரமளிக்கிறது.

பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபையை கடந்த அக்டோபரில் தாம் கலைத்தது நியாயமானதென்று பெடரல் நீதி மன்றம் தந்த தீர்ப்பைத் தொடர்ந்து அவர் இப்போது, தனி அதிகாரங்களை மேற்கொண்டிருக்கிறார்.

★

மேற்கு பாகிஸ்தான் மாநில அமைப்பு

மேற்கு பாகிஸ்தானில் உள்ள மாநிலங்கள் அனைத்தையும் ஒரே அங்கமாக இணைப்பது பற்றிய கவர்னர்-ஜெனரலின் பிரகடனத்தின்படி, இனி, புது மாநிலத்தின் தலைநகராக லாகூரும், கோடைகாலத் தலைநகராக (எல்லை மாநிலத்திலிருக்கும் அபட்டாபாத் என்ற நகரமும் இருக்குமென்றும் மாநிலத் தலைநகரில், ஒரே கவர்னர், மந்திரி சபை, சட்ட சபை, சர்க்கார் தலைமைக் காரியாலயம், இப்போது மத்திய அரசாங்க நேரடி நிர்வாகத்தில் உள்ள பகுதிகளும், மலைஜாதியினர் வாழும் பகுதி நீங்கலாக, புதிய மாநில சர்க்காரின் கீழ் இருக்கும் என்றும் தெரியவருகிறது.

புது மாநிலத்தில் 11 பிரிவுகள், 50 மாவட்டங்கள் இருக்கும் என்றும், ஒவ்வொரு பிரிவையும் நிர்வகிக்க ஒவ்வொரு கவர்னர் இருப்பார் என்றும் தெரிய வருகிறது.

புதிய மேற்கு பாகிஸ்தான் மாநிலத்திற்கு ஒரே உயர் நீதிமன்றம் லாகூரிலும், அதன் கிளைகள் பெஷாவர், கராச்சி ஆகிய இடங்களிலுமிருக்கும் என்றும் பிரகடன விபரம் கூறுகிறது.

★

முகம்மது அலி மந்திரி சபை?

இப்போது முகம்மது அலி தலைமையில் உள்ள மந்திரி சபை, கவர்னர்-ஜெனரலின் பிரகடனத்திற்குப் பின் தொடர்ந்து நீடிக்குமா என்பது இன்னும் தெளிவாகவில்லை.

சுஹ்ரவர்த்தி போன்ற பெருந் தலைவர்களில் சிலர், மறு தேர்தல் வரையில், பிரதமர் என்று ஒருவர் தேவை இல்லை எனவும், இப்போதுள்ள மந்திரிகள் அனைவரும், கவர்னர் - ஜெனரலின் மந்திரி குழுவினராயிருந்தால் போதுமென்றும் கருதுகின்றனராம்.

★

கிழக்கு பாகிஸ்தானில் மக்களாட்சி ஏற்படும்?

அவாமி லீக் கருத்து

கராச்சி, மார்ச் 27—

'கிழக்கு வங்கத்தில் கவர்னர் ஆட்சிக்கு முடிவு கட்டி மீண்டும் மக்களாட்சியை நிறுவுவதற்காக அவாமி லீக் தலைவர்களான பாஷானி, சுஹ்ரவர்த்தி ஆகியோரும், பஸ்லுல் ஹக்குடன் வட்ட மேஜை மாநாடு ஒன்றில் கூடி பேசவேண்டும்' என்ற கருத்து அவாமி லீக் தலைவர்களிடத்தில் இருப்பதாகத் தெரிகிறது.

கிழக்கு பாகிஸ்தான் அவாமி லீக் பிரமுகர்களான அட்டாவுர் ரஹ்மான், மஜிபுரி ரஹ்மான் முதலியோர் தங்கள் தலைவர் சுஹ்ரவர்த்தியைச் சந்திக்க இங்கு வந்துள்ளனர்; அவர்களே மேற்கண்ட கருத்துக்களை வெளியிட்டவர்கள்.

பஸ்லுல் ஹக்கே மீண்டும், கீழ் வங்க முதன் மந்திரியாக வேண்டுமென பாக். பிரதமர் முகம்மது அலி சில தினங்கள் முன் தெரிவித்திருந்தார். ஆனால், சமீபத்தில் மந்திரி சபையில் சட்ட மந்திரியாக இடம் பெற்ற சுஹ்ரவர்த்தியின் கை மேலோங்கி வருகிறது என்றும் கூறப்படுகிறது

★

முற்றிவரும் சிந்து நெருக்கடி!

புதிய திருப்பங்கள்!

கராச்சி, மார்ச் 26—

சிந்து சட்டசபைத் தலைவர் கைது செய்யப்பட்டதையொட்டி, புதியதாக இப்போது சட்டசபைத் தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டாமென்ற சிந்து மாநில கவர்னரின் கட்டளையை மீறி, சிந்து சட்டசபை உறுப்பினர்கள், துணை சபாநாயகராக இருந்த பீர் குர்பான் அலியை தேர்ந்தெடுத்திருக்கின்றனர். இவர், தற்போதைய முதலமைச்சரா குர்கோவின் 'வலது கை' போன்றவர் என்று கூறப்படுகிறது.

சட்டசபை தனது வேலைகளையெல்லாம் அவசர அவசரமாக முடித்துக்கொண்டதும், கால வரையறை இல்லாமல் ஒத்திவைக்கப் பட்டிருக்கிறது.

இந்நிகழ்ச்சிகள் அனைத்தின் விளைவாக, சிந்து மாநிலத்தில் அரசியல் நெருக்கடி அதிகரித்து விட்டது. மத்திய சர்க்காரின் ஆலோசனையின் பேரிலேயே மேற்கண்ட உத்திரவு பிறப்பித்த கவர்னர், தமது உத்திரவு சட்டசபையால் மீறப்பட்டது குறித்து, தமது கவர்னர் பதவியை இராஜிநாமாச் செய்துவிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறதாம்.

ஐதராபாத் சிறையில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் சட்டசபைத் தலைவர் மீர்குலாம் அலிகான் தால்பூர், உடல்நலக் குறைவின் காரணமாக ஜாமீனில் விடுவிக்கப்பட்டுள்ளார் என்றும், அவரது தற்போதைய நிலைமை திருப்திகரமாக இல்லை என்றும் கூறப்படுகிறது.

அவரை ரூ 10,000 ஜாமீனில் விடுவிக்க சர்க்காரே ஏற்பாடுகள் செய்ததாம்.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபைத் தலைவரான பீர் குர்பான் அலிகான் சட்டசபையில் எழுப்பப்பட்ட ஒழுங்குப் பிரச்சினை ஒன்றில் தீர்ப்பளித்துப் பேசுகையில், கவர்னரது கட்டளைகளெதுவும் தம்மைக் கட்டுப்படுத்தாது என்றும், சட்டசபை விவகாரங்களில் தலையிட அவருக்கு சட்டப்படி எந்த ஒரு அதிகாரமும் கிடையாது என்றும் கூறியிருக்கிறார்.

கழகக் கூட்டங்கள்

★

திருநள்ளாறு
வீரப்பிள்ளை திடலில்
30—3—55 மாலை 5 மணிக்கு
தலைவர்: ந. இராமசாமி
பேசுபவர்:
சி. பி. சிற்றரசு

★

சலுப்பை

30—3—55 மாலை 6 மணிக்கு தோழர் சு. இளநாகன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஆர். பாலகுருசாமி, தங்கவேலு, ந. வரதராசன், பொ. தருமன், லா. ந. ராமலிங்கம், முத்துகுமாரசாமி, தோழியர் பா. கருணாநிதி ஆகியோர் பேசுவர்.

ஐந்தாண்டுத் திட்ட கண்டனக் கூட்டம்

★

திருமழிசை
கெங்கைகோண்டான் மண்டபத் தெருவில்
30—3—55 மாலை 5½ மணிக்கு
தலைவர்: டி. கே. போரூரான்
பேசுவோர்:
என். வி. நடராசன்
வி. எஸ். கோவிந்தராசன்
டி. சண்முகம் எம்.எல்.ஏ.

திருக்குறள் வகுப்பு

29—3—55 பிற்பகல் 2-30 மணிக்கு, சென்னை, பெத்தநாய்க்கன்பேட்டை, முத்துக்கிருஷ்ணன் தெரு, 15-ம் எண்ணுள்ள இல்லத்தில், தாய்மார் கழகச் சார்பில் நடைபெறும். 'இன்னா செய்யாமை' என்னும் அதிகாரம் பற்றி, திரு. மயிலை. சிவமுத்து, திருமதி அம்மணி ஆகியோர் பேசுவர்.

கைதான முன்னாள் முதன்-மந்திரி வீட்டில் சோதனை

ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன

கராச்சி, மார்ச் 27—

சிந்து மாநில மந்திரிகளைக் கொலை செய்ய சதி செய்ததாக சென்ற வாரம் கைது செய்யப்பட்ட முன்னாள் முதன் மந்திரி காஜி பஸ்லுல்லாவின் வீட்டை போலீசார் சோதனையிட்டபோது, அனுமதி இல்லாத ஆயுதங்களையும், வெடி மருந்துகளையும், சதி சம்மந்தப்பட்ட தஸ்தாவேஜுகள் சிலவற்றையும் கைப்பற்றியுள்ளனர் என்று ஒரு செய்தி வெளியாகியுள்ளது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

காஞ்சி கலை விழா

(ஏழை மாணவர் உதவி நிதிக்காக)

காஞ்சிபுரம் கண்ணன் டாக்கீஸ் மைதானத்தில்

30—3—55 இரவு 10 மணிக்கு
செங்கற்பட்டு மாவட்ட கலெக்டர் திரு. லோபோ பிரபு அவர்கள் தலைமையில்
எஸ். எஸ். ராஜேந்திரன், டி. வி. நாராயணசாமி, எம்.என்.கிருஷ்ணன், சி.ஆர்.ராஜகுமாரி ஆகியோர் நடிக்கும்

மகாராணி

★

31—3—55 இரவு 10 மணிக்கு
திரு. எஸ். சுயம்பிரகாசம் எம்.எல்.ஏ., அவர்கள் தலைமையில்
மனோகர், வித்தியாவதி, பிர்முகமது ஆகியோர் நடிக்கும்

இன்ப நாள்

★

1—4—55 இரவு 10 மணிக்கு
திரு. டி. சண்முகம் எம்.எல்.ஏ., அவர்கள் தலைமையில்
எம். ஜி. ராமச்சந்திரன், எம். ஜி. சக்கரபாணி, ஜி. சகுந்தலா, என். எஸ். நாராயணப்பிள்ளை ஆகியோர் நடிக்கும்

ஆசை நினைவு

★

2—4—55 இரவு 10 மணிக்கு
திரு. எஸ். தெய்வசிகாமணி எம்.எல்.ஏ., அவர்கள் தலைமையில்
எம். ஜி. ராமச்சந்திரன் குழுவினர் நடிக்கும்

பகைவனின் காதலி

★

3—4—55 இரவு 10 மணிக்கு
திரு. ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ., அவர்கள் தலைமையில்
தியாகராயர் கல்லூரி கலைக் குழு நடிக்கும்

மணிநாட்டு கூனன்

★

4—4—55 இரவு 10 மணிக்கு
திரு. ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் தலைமையில்
தியாகராயர் கல்லூரி கலைக் குழு நடிக்கும்

எதிர்பார்த்தது

★

5—4—55 இரவு 10 மணிக்கு
பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள் தலைமையில்
என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம் நடிக்கும்

தளபதி

நன்கொடையாளர்: ரூ. 25; விழா முழுமைக்கும்: ரூ. 10
அன்றாடம்: சேர் ரூ. 2; தரை அணா 12; பெண்களுக்கு: அணா 8

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

ஆசியாவில்....

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சீகக் குடாக் கடல் நாடுகள், பிரிட்டன் முதலிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. ஜிம்புதுக்கும் இந்திய அரிசி அனுப்பப்படுகிறது. சென்ற ஆண்டில் சுமார் 45,000-டன்கள் அரிசி ஏற்றுமதி செய்ய அனுமதியளிக்கப்பட்டது. இப்போது ஏற்றுமதி வரி குறைக்கப் பட்டிருப்பதால், இவ்வாண்டில் ஏற்றுமதி அதிகமாகக் கூடும்.

இவ்வாண்டில் பாகிஸ்தானும், 'பாசுமதி', 'ஜோஷி' போன்ற உயர் ரக அரிசிகளை ஏற்றுமதி செய்யலாம்.

திருமணம்

30—3—55 காலை 9 மணிக்கு, மதுரை, ஆழ்வார்புரம், அம்மாளு அம்மாள் திருமண மண்டபத்தில், தோழர் நா. மு. சண்முகம்—தோழியர் சானகி திருமணம், திரு. அ. கி. பரந்தாமனார் தலைமையில் திருமணம் நடைபெறும். தோழர்கள் எஸ். முத்து, பூ. கணேசன் ஆகியோர் பேசுவர்.

மதுரையில்

மதுரையில் 'முரசொலி' விற்பனை செய்வதற்கு, பிரதி ஒன்றுக்கு எட்டணா முன்பணம் கட்டக்கூடிய ஏஜண்டு தேவை. உடன் விண்ணப்பிக்கவும்.

'முரசொலி'—சென்னை-6

வேலூர் (சேலம்) அண்ணா மன்றம்

17—3—55 இரவு 9½ மணிக்கு, நடைபெற்ற மன்ற செயற்குழு கூட்டத்தில், 5—3—55ல் நடந்த வரவு-செலவு கணக்குகள் பரிசீலனை செய்து ஒப்புக்கொள்ளப் பட்டதுடன், தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம்.ஏ.